# எங்கள் குருநாதராம், சற்குருநாதராம்
# சடையப்ப சுவாமிகளின்
# ஆசியுரை

**அன்பான மெய் அன்பர்களே!**

இவ் ஆலயம் பல கிராமத்து மக்களும் ஒன்று சேர்ந்து இவ் ஆலயத்தை உருவாக்க பண உதவியும், பொருள் உதவியும், சரீர உதவியுமாக பல வழிகளிலும் பல விதமான உதவிகளையும், ஒத்தாசைகளையும் இந்த ஆச்சிரமத்துக்கும், திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலயத்திற்கும் அருளிய எல்லா மக்களுக்கும் அன்பர்களுக்கும்.....

பெருமானின் ஆலயம் 1987ம் ஆண்டு ஆடி மாதம் 6ம் திகதி மகா கும்பாசிஷேத்துடன் ஆரம்பிக்கப்பட்டு திருவிழா, தீர்த்தம் நடைபெற்று ஒருவருடம் பூர்த்தியாகும் இவ்வேளையில், இவ்வாலயத்தின் சிறப்புக்கு எடுத்துக்காட்டும் முறையில் இற்றைக்கு சுமார் 15 வருடங்களுக்கு முன் அமரராகிவிட்ட உயர்திரு மயில்வாகம் நல்லதம்பி சாஸ்திரியார் அவர்களால் திராய்மடு முருகன் மேல் பாடப்பட்ட காவடிச் சிந்தும், கும்பிப்பாடல்களையும் ஒன்று திரட்டி இதை அச்சுப் பதிப்புச் செய்து வெளியிட்ட அன்பர்க்கும், எல்லா மக்களுக்கும் எனது அன்பான நன்றியையும், ஆசீர்வாதத்தையும், வணக்கத்தையும் பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதற்கு எல்லாம் வல்ல எம்பெருமான் அருள் பாலிப்பாராக.

சடையப்ப சுவாமிகள்

23-07-1988





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கதிர் ஒளி பரப்பி, கதிரவன் உதித்தெழும் கிழக்கு மாகாணத்தின் தேமதுரத்தமிழோசை ஒலிக்கும் மட்டுமாநகரின் மாமாங்கப் பதியின் மணியோசை, நாத, கீத ஒலிகள், பக்தர்களின் அரோகரா என்னும் நாமம் மாமாங்கப் பெருமானின் பெரும் புகழை ஒலிக்கும் வேளை,

ஆம்! அன்று 1909ம் ஆண்டு ஆடி மாதம் 13ம் திகதி ஆடி அமாவாசை மாமாங்க ஈஸ்பரரின் தீர்த்தோற்சவத் தினம் காலை 9 மணிக்கு எம்பெருமான் மாமாங்க ஈஸ்பரர் தீர்த்தம் ஆடுவதற்கு ஆலயத்தினுள்ளிருந்து வெளியே எழுந்தருளும் வேளை எம்பெருமான் மாமாங்கப் பதியில் இருந்து வடக்கே 1/4 மைல் தொலைவில் மட்டிக்களி என்னும் கிராமத்தில் அமராபதி என்னும் அருந்தவத் தாய்க்கும் பட்டங்கட்டி தம்பியப்பா என்னும் அன்புத் தந்தைக்கும் தவப் புதல்வராக இப்பூவுலகில் அவதரித்தார்.

இந்த நற்புத்திரரான உத்தம புருஷருக்கு தாய், தந்தையர்கள் நல்லதம்பி என்னும் திருநாத்தை சூட்டினர். சிறு வயது முதல் தெய்வ பக்தியும், ஒழுக்கமும் நிறைந்த இவர், தனது இளவயதினிலே தந்தை, தாயை இழந்தார். இந்த முப்பு இப்பெரு மகனுக்கு தனக்கு ஒரு நிழல் இல்லையே என்று ஏங்க வைத்தது. அந்த நேரத்திலும் தன் அன்புத் தாயார் தனக்கு இட்ட கட்டளைகளை நினைத்து அதன்படி வாழ்க்கையை ஆரம்பித்த இப்பெருமகன் நாளடைவில் பரம்பொருளுக்கே குருவான ஞானகுருவான கிலகுருநாதனுக்கு தன்னை அர்ப்பணித்தார்.

1950ம் ஆண்டு சித்திரை மாதம் 1ம் திகதி புதன்கிழமை மட்டிக்களிக்கு வடக்கே 1½ மைல் தொலைவிலுள்ள ஒருவனத்தை அடைந்தார். அங்கே வனத்தை துப்பரவு செய்து அந்த இடத்தில் ஒரு ஆச்சிரமம் அமைத்து முருகப் பெருமானுக்கு விளக்கேற்றி வரும்வேளை 1952ம் ஆண்டு இந்த அவதார புருஷருக்கு ஆறுமுகன் அருளால் செஞ்சடை தோன்றியது. அன்று முதல் “சடைச்சுவாமி” என்னும் திருநாமம் சூட்டப்பட்டது. கிராமத்து மக்கள் இப் பெருமகனுக்கு மிகவும் மதிப்பும், மரியாதையும் காட்டத்தொடங்கினர். கடந்த 38 வருடகால அவரின் கடுந்தவத்தின் பயனாக நமது மக்கள் எல்லோரும் உய்யும் பொருட்டு தன் வாழ்வை அர்ப்பணித்து திராய்மடு என்னும் பெரும்நாமம் விளங்க ஸ்ரீ திருமுருகனின் திருநாமம் உலகமெல்லாம் பரப்ப திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலயத்தைச் ஸ்தாபித்து 1987ம் ஆண்டு ஆடி மாதம் 6ம் திகதி மகா கும்பாபிஷேகத்துடன் ஆரம்பிக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து தினப்பூசையும், திருவிழாத் தீர்த்தமும் நடைபெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

